
பக்கங்கள் 20+2

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை 14.11.2025 | அதிர்வு 108

## கொட்டாஞ்சேனை கொலை: மேலும் இருவர் சிக்கினார்கள்



கொழும்பு, கொட்டாஞ்சேனையில் அண்மையில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







### தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து

# ஜனாதிபதி – தமிழரசு பேச்சு புதன் அல்லது வியாழனன்று

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் குழுவினருக்கும் இடையில் வரும் புதன் கிழமை அல்லது வியாழக் கிழமை நண்பகல் ஒரு மணிக்கு கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேரடிப் பேச்சுக்கள் நடைபெறும் எனத் தெரிகின்றது.

இந்த விடயம் குறித்து பேசுவதற்காக நேரம் ஒதுக்கி தருமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கோரிக்கை கடிதத்தின் அடிப்படையில் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏற்கனவே இன்னொரு முக்கிய விடயத்துக்கான சந்திப்புக்காக புதன் அல்லது வியாழக்கிழமை நண்பகல் நேரத்தை வழங்கி இருக்கின்றார். அந்தச் சந்திப்பு நடக்கும் நாளுக்கு மற்றைய தினத்தில் இந்தச் சந்திப்பு நடக்கும் என்று ஜனாதிபதியின் செயலக அதிகாரிகள் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரோடு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்திருக்கின்றார்கள் என அறியவருகின்றது.

02

# வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்காமல் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துகின்றோம்




## தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை சபையில் அறிவித்தார் சாணக்கியன்

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்குபற்றாது என்ற தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் அறிவித்த அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், அதற்கான காரணங்களையும் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

02

# புதிய தேர்தல் ஆணையர் நாயகமாக இன்று கடமையேற்றார் ரசிக பீரிஸ்



(எம்.எச்.எம். சியாஜ்)

புதிய தேர்தல் ஆணையாளர் நாயகமாக ரசிக பீரிஸ் இன்று வெள்ளிக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

முன்னாள் தேர்தல் ஆணையர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க நேற்று வியாழக்கிழமை தனது பதவியிலிருந்தும், அரச சேவையிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்தார்.

2019 ஒக்டோபர் 16ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட அவர், கடந்த 34 ஆண்டுகளாக அரச அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார்.

# தட்டுவன்கொட்டிப் பகுதியில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு!

(பூ.லின்ரன்)

ஏ – 9 பிரதான வீதியில் கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட ஆனையிறவு – தட்டுவன்கொட்டிப் பகுதியில் பெண் ஒருவரின் சடலம் பஸ் தரிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

35 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வரவு – செலவு...

“இன்றைய வாக்கெடுப்பில் எங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசு சார்பாகவும் இல்லை, அரசுக்கு எதிராகவும் இல்லை – வாக்கெடுப்பில் இருந்து விலகுகின்கிறோம். நடுநிலை வகிப்பதன் மூலம் ஜனாதிபதி மீதான எங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தி, தீர்வுக்கான நல்லெண்ணத்தை ஒரு செய்தியாக விடுக்கின்றோம்” – என்றார் அவர்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “ஜனாதிபதியுடன் அடுத்த வாரம் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில்தான் 2026 வரவு – செலவுத் திட்டத்தின் மீது வாக்களிப்பதைத் தவிர்த்துள்ளோம்.

இது ஒரு நல்லெண்ண அடிப்படையிலான முடிவு. நாம் எமது கட்சி ஜனாதிபதியின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாகத்தான் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி எங்கள் பிரச்சினைகளை தீர்க்க முன்வருவார், தமிழர் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயல்வார், எமது மக்களின் நீண்டகாலமாக எதிர்பார்க்கும் புதிய அரசமைப்பை கொண்டு வருவார், பிரச்சினைகளில் பாதிக்கப்பட்ட சமூகத்தின் கருத்துக்களைக் கேட்பார், நிலப் பிரச்சினைகளில் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையுடன்தான் ஏகமனதாகக் கட்சியால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் எதிர்க்க வேண்டிய நான்கு ஆண்டுகள் இன்னும் எங்களுக்கு உள்ளது.

அடுத்த ஓர் ஆண்டுக்குள் எந்த முன்னேற்றமும் இல்லையெனில், அடுத்த ஆண்டு எதிர்ப்புத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றோம்.

தமிழரசுக் கட்சி இன்று வாக்கெடுப்பில் இருந்து விலகியிருப்பது நாம் அரசுடன் செயற்படத் தொடர்ந்து தயாராகவுள்ளோம் என்பதைக் காட்டும் ஒரு முக்கியமான செய்தியாகும்.

அத்துடன் எனது தகப்பனாரின் இறுதி அஞ்சலியில் பங்குபற்றிய மற்றும் துக்கம் விசாரித்த அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்றார்.

### ஜனாதிபதி...

புதன்கிழமையா, வியாழக்கிழமையா சந்திப்பது என்பதை இன்று அல்லது நாளை ஜனாதிபதி செயலகம் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகளுக்கு உறுதிப்படுத்தும் எனத் தெரிகின்றது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர், பொதுச்செயலாளரோடு கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுவர் எனத் தெரிகின்றது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றிய பேச்சுக்கள் என்பதால் அது குறித்து மட்டுமே இந்த உரையாடலில் கலந்துரையாடப்படும் என்றும், தீர்வுக்காக முன்னகரும் அதேநேரம், அதற்கிடையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துதல், அதுவரையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் ஆகியவை குறித்தும் தமிழரசுக் கட்சி இந்தச் சந்திப்பில் வலியுறுத்தும் எனத் தெரிகின்றது.

### கொட்டாஞ்சேனையில்...

இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில், பெண் ஒருவரும், இளைஞர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு -13 ஐச் சேர்ந்த 27 வயது இளைஞரும், மகரகம பகுதியைச் சேர்ந்த 32 வயது பெண்ணுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிதாரிகளுக்கு வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் தங்குவதற்கு இடம் வழங்கியமை தொடர்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களைத் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# வங்காள விரிகுடாவில் உருவாகின்றது புயல்!

## வடக்கு மாகாணத்தில் மழை கொட்டித் தீர்க்கும்

வங்காள விரிகுடாவில் தற்போது காணப்படும் காற்றழுத்த நிலைமைகள் காரணமாக மழை தொடரும் என்றும், எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் புயலுக்குச் சாத்தியம் காணப்படுகின்றது எனவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும் வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை எதிர்வுகூறியபடி வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது இலங்கைக்குத் தென்கிழக்காக இலங்கைக்கு அருகில் காணப்படுகிறது. இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மழை எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடரும் வாய்ப்புள்ளது.

மீளவும் ஒரு காற்றுச் சுழற்சி எதிர்வரும் 17ஆம் திகதி வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் உருவாகும். அது கிழக்கு மாகாணத்துக்கு அருகாக நிலை கொள்ளும். இதனால், மீளவும் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதன்பின் எதிர்வரும் 21ஆம் திகதி இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே மாநிலத்துக்கு அருகாக காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. இது தீவிரம் பெற்று ஒரு புயலாக மாறும் வாய்ப்புள்ளது.

இந்தப் புயலால் எதிர்வரும் 22ஆம் திகதி வரை இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் மிக கன மழையைப் பெறும் என்பதோடு கடற்பகுதிகள் மற்றும் கரையோரப் பகுதிகளில் பலத்த வேகத்தில் காற்று வீசக்கூடும். எனினும், இதனை எதிர்வரும் 18ஆம் திகதிக்குப் பின்னரே உறுதிப்படுத்த முடியும். இந்தப் புயலுக்குச் சென்வார் எனப் பெயரிடப்படும். இதனால், எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.” – என்றுள்ளது.



# போதைப்பொருள் சுற்றிவளைப்பில் இரு வாரங்களில் 16,738 பேர் கைது!

நாடு முழுவதும் ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் வரை மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்பின்போது 16 ஆயிரத்து 738 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பில் நாடளாவிய ரீதியில் 16 ஆயிரத்து 915 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 110 கிலோ 556 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 600 கிலோ 947 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 10 கிராம் கொக்கேயின் போதைப்பொருளும், 458 கிலோ 216 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 10 இலட்சத்து 15 ஆயிரத்து 632 கஞ்சா செடிகளும், 4 கிலோ 847 கிராம் குஷ் போதைப்பொருளும், 25 கிலோ 483 கிராம் ஹசீஸ் போதைப்பொருளும், 41 ஆயிரத்து 874 மாத்திரைகளும் , 36 கிலோ 176 கிராம் மாவா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 313 பேரைப் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



# யாழ். நகரில் நீரிழிவு தின நடைபவனி

(எஸ்.நிதர்ஷன்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக காலை 6.30 மணியளவில் இந்த நடை பவனி ஆரம்பமானது.

இந்த நடைபவனியில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்

இந்த நடைபவனி கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.


















# சுதந்திரபுரத்தில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைத் தேட இன்று அகழ்வு!

## எதுவும் மீட்கப்படவில்லையாம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுதந்திர புரம் பகுதியிலுள்ள தனியார் காணி யில், யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் மறைத்து வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் ஆயுதங்களை தேடும் நோக்கில் இன்று (14) காலை முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஹெச். மஹ்ரூஸ் நேரடி மேற்பார் வையில் அகழ்வுப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டு இடம்பெற்றன.

விஷேட அதிரடி படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், புதுக்குடியிருப்பு பொலிஸார் இணைந்து அகழ்வு பணி கள் இடம்பெற்றிருந்தது.

நீதிமன்றத்தில் 10 அடி ஆழம்வரை அகழ்வதற்கு அனுமதி பெறப்பட்டு பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் அகழ்வு பணிகள் இடம்பெற்றிருந்தது. குறித்த பகுதியில் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில் அந்த பகுதியில் அருகாமையில் அகழ்ந்து பார்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு உரிய தரப்பினர் கோரிய நிலையில் பிறிதொரு நாளுக்கு அனுமதிக்கு கோருமாறு நீதிபதி கூறியிருந்ததுடன், குறித்த அகழ்வு இடம்பெற்ற பகுதியை மூடுமாறு நீதி பதி உத்தரவு வழங்கியதை அடுத்து மூடப்பட்டிருந்தது.

தற்போது அகழ்வு இடம்பெற்ற பகுதியில் 2021 ஆம் ஆண்டு அகழ்வு இடம்பெற்று எதுவும் கிடைக்காத நிலை யில் மூடப்பட்டிருந்தது.

இருப்பினும் இதுவரை இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் எவ்வித ஆயு தங்களோ, தங்கங்களோ மீட்கப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக் கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மீண்டும் பேச்சுப் பல்லக்கு

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள், அவர் பதவிக்கு வந்து ஒரு வருடத்தின் பின்னர் இப்போதுதான் நடப்பதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த பேச்சு நடைபெறும் எனத் தெரிகின்றது.

இலங்கைத் தமிழரசு கட்சி சார்பில் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்றுவார்கள் என்று தெரிகின்றது.

கடந்த 75 ஆண்டுகளுக்கு மேல் இலங்கையை அதிகாரம் செய்த ஆட்சித் தலைவர்களோடு எல்லாம் தமிழர் தலைமைகள் பல தடவைகள் இத்தகைய பேச்சுக்களை நடத்தி இருக்கின்றன.

அந்த வகையில் இலங்கை அரசின் புதிய தலைவரான அநுரகுமார திஸநாயக்காவோடு இப்போது புதிய அத்தியாயம் தொடங்கப்படுகின்றது.

முன்னைய அத்தியாயங்கள் ஆரம்பிக்கப்பட்டு, வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டு, அரைவாசியில் கைவிடப்பட்டமை போல இல்லாமல் இதுவாவது ஒரு காத்திரமான முற்றுப்புள்ளி நோக்கி நகருமா என்பதுதான் தேசிய இனப் பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழினத்தின் ஆதங்கமாக இருக்கின்றது.

இந்த அரசுத் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, அதிகாரத்தை கைப்பற்றி, அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலிலும் பெருவெற்றி ஈட்டிய பின்னர், தமிழர் தரப்பை சமரச ஏற்பாடுகளுக்காகச் சந்திக்க இணங்குவதற்கே ஒரு வருடம் பிடித்திருக்கிறது.

அதுவும் தமிழர் தரப்பு நெருக்கு வாரம் கொடுத்து, வரவு - செலவு திட்டத்தில் எதிர்த்து வாக்களித்து அரசுக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம் என்று அழுத்தம் தந்த பின்னணியிலேயே இந்த சந்திப்புக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரசுக்கும், அரசு தலைவர்களுக்கும் தேசிய இனப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நியாயமான - உரிமையான - கோரிக்கைகளை ஏற்று, நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நீதியான தீர்வு ஒன்றை வழங்க வேண்டும் என்ற உறுதி - திடசங்கற்பம் - இருந்தால் மட்டுமே இத்தைய சந்திப்பினாலும், அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படக் கூடிய கட்டுறுதியாயான நடவடிக்கைகளினாலும் பயன் ஏதும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

தமிழர் தரப்பின் நெருக்கடிகளை சமாளித்து, காலத்தை இழுத்தடித்து, ஆட்சிச் செயற்பாட்டைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்காக மட்டுமே இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா இணங்கிருப்பாராயின் இதுவும் இதுவரை காலமும் கடந்து போன சமரசப் பேச்சுக போல அவமாகிக் கழிந்து விடும்.

தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பை உருவாக்குவோம் என்ற தேசிய மக்கள் சக்தி அரசின் நிலைப்பாடு உண்மையானால், இப்போது இருந்தே இந்தப் பேச்சுக்களில் ஜனாதிபதி தரப்பு நேர்மையுடனும், நீதியுடனும், நியாயத்துடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், விட்டுக் கொடுப்புடனும், நீதி செய்யும் உறுதியுடனும் பங்குபற்ற வேண்டும்.

ஆரம்பப் பேச்சிலேயே அவரது பற்றுறுதியை எடை போட முடியுமா என்பதைப் பார்த்திருக்கலாம்.

# யாழில் விவசாய நிலங்களுக்குள் ஊடுருவியுள்ள ஆபிரிக்க நத்தை!

## நெல், மரக்கறி இனங்களை அழிக்கிறது; தடுப்பதற்கு மாவட்ட விவசாயக் குழுவில் தீர்மானம்!!



(பூ.லின்ரன்)

யாழில் விவசாய நிலங்களுக்குள் ஊடுருவியுள்ள ஆபிரிக்க நத்தை, நெல் மரக்கறி இனங்களை அழித்து வருகின்றது.

இந்த நிலையில் இவற்றைத் தடுப்பதற்கு மாவட்ட விவசாயக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் குறிப்பாகத் தீவகப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்குள் ஆபிரிக்க நத்தை இனம் ஊடுருவியுள்ள நிலையில், அதனைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயுமாறு மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட விவசாய மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலின் போது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் கடல் கடந்த தீவகப் பகுதிகளில் ஒன்றான நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் மேற்கு பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் குறித்த ஆபிரிக்க நத்தை இனம் வெகுவாக விவசாய நிலங்களுக்குள் ஊடுருவியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரபாகரன்,

நெடுந்தீவு மக்கள் தமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான தானியங்கள் மற்றும் மரக்கறிகளை நெடுந்தீவிலே உற்பத்தி செய்கிறார்கள்.

இவ்வாறான நிலையில் குறித்த பகுதி மக்களின் விவசாய நிலப்பரப்புக்குள் இந்த நத்தை இனம் பெருமளவில் ஊடுருவி உள்ள நிலையில் பயிர்களை உறிஞ்சி உண்ணுகிறது.

இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராவிட்டால் அங்கு வாழும் மக்களின் உணவு த் தேவையை பூர்த்தி செய்வதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பாடும். அவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து போகும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படும்.- என்றார்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அரச அதிபர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் உள்ளடக்கிய குழு ஒன்றைத் தயார் செய்து குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

# கற்பிட்டி ரெட்பானா கடற்கரைப் பகுதியில் பீடி இலைகள், சவர்க்காரப் பெட்டிகள் மீட்பு!



(கற்பிட்டி எம்.எச். எம். சியாஜ்)

கற்பிட்டி, கப்பலடி மற்றும் ரெட்பானா கடற்கரைகளில் இலங்கை கடற்படையினர் செவ்வாய்க்கிழமை (11) நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக எடுத்துச் செல்வதற்காக போக்குவரத்துக்கு தயார் செய்யப்பட்ட 840 கிலோ பீடி இலைகள் மற்றும் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட சவர்க்காரக் கட்டிகளுடன் கெப் வண்டியும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கடல் வழிகள் ஊடாக கடத்தல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படை வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் விஜய நிறுவனத்தினால் கற்பிட்டி கப்பலடி கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான கெப் வண்டி சோதனையிடப்பட்டது. அங்கு சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்டு போக்குவரத்துக்கு தயார்படுத்தப்பட்ட சுமார் 840 கிலோகிராம் பீடி இலைகள் அடங்கிய கையிருப்புடன் கெப் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், இலங்கை கடற்படைக் கப்பல் விஜயவால் கற்பிட்டி ரெட்பானா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு தேடுதல் நடவடிக்கையில், சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்டு, அப்பகுதியில் உள்ள புதருக்குள் ஏழு (07) பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1980 சவர்க்காரக் கட்டிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கெப், பீடி இலைத் தொகுதி மற்றும் சவர்க்காரக் கட்டிகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் விசேட பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.




# கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகை 4 பேர் தப்பியோட்டம்; 80 லீற்றர் கசிப்பு மீட்பு!

**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடங்களை சுற்றிவளைத்து தடுக்கும் முகமாக சந்திவெளி பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட சித்தாண்டி சந்தனமடு பகுதி அண்மித்த இடங்களில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சுற்றி வளைப்பு தேடுதலில் சந்தேகத்துக்கு இடமான 4 பேர் தப்பி ஓடியுள்ளனர். 2 பரல்களில் 80 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் 2 தகர பரல்கள் உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சித்தாண்டி சமூகமட்ட இளைஞர்கள் மற்றும் சந்திவெளி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த சுற்றிவளைப்பில் 2 மோட்டார் சைக்கிளில் தப்பியோடிய சந்தேக நபர்கள் 4 பேரும் மாவடிவேம்பு பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். தப்பியோடிய நபர்களைத்தேடி பொலிஸார் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர்.

அண்மைக் காலமாக மாவடிவேம்பு உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தி இடங்களை தேடி சந்திவெளி மற்றும் ஏறாவூர் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்புச் செய்து கைது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

சுற்றி வளைப்பில் கைப்பற்றப்பட்ட கசிப்பு மற்றும் பொருள்களை நீதிமன்றுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சித்தாண்டி, மாவடிவேம்பு, ஈரளக்குளம் உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடங்களைத்தேடி இடம்பெறும் சுற்றிவளைப்பு தொடர்ச்சியாக இடம்பெறுமென பொலிஸார் தெரிவித்தனர்.







# டிக்கோயா என்:.பீல்ட் ரோஸ்கிலியா தோட்ட வீதியைச் செப்பனிட்டுத் தாருங்கள்

## பிரதேச மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

டிக்கோயா என்ஃபீல்ட் ரோஸ்கிலியா தோட்ட வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு பிரதேச மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட டிக்கோயா என்ஃபீல்ட் ரோஸ்கிலியா தோட்டப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இதனால் பிரதேசத்தில் வாழும் மக்கள் பல்வேறு அசோகரியங்களை எதிர் நோக்குகின்றனர் என்று குற்றம் சுமத்துகின்றனர்.

என்ஃபீல்ட் பகுதியில் இருந்து ரோஸ்கிலியா தோட்டத்துக்கு செல்லும் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட இந்த வீதியே இவ்வாறு சேதமடைந்து காணப்படுகிறது. இந்த பகுதியில் இந்த வீதியில் மாத்திரம் சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

இந்த வீதியினூடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வாகன சாரதிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் என்று தெரிவிக்கின்றனர்.

இந்தத் தோட்ட பகுதியில் உள்ள மக்கள் அவசர தேவைகளுக்கு நாளாந்தம் ஹட்டன் மற்றும் டிக்கோயா நகரபகுதியை நாடவேண்டியுள்ளது.

வைத்திய சேவையை இவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் டிக்கோயா கிழங்கன் ஆதார வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் பெரும் சிரங்களை எதிர்கொள்கின்றனர்.

குறித்த வீதியின் அருகாமையில் இந்திய அரசால் வீடமைப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்கான வீதிக் கட்டமைப்பு முறையாக இல்லை என்று மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த வீதியினை புனரமைத்து மாணவர்களின் நலன் கருதி தேசிய மக்கள் சக்தி அரசு ஒரு சிறிய ரக பஸ் சேவையை வழங்க வேண்டும் எனவும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வீதி புனரமைப்புப் பணிக்காக மில்லியன் கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் எங்களது தோட்ட வீதியையும் புனரமைத்து தாருங்கள் என்று நாட்டின் ஜனாதிபதியிடம் என்ஃபீல்ட் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# அழிவின் விளிம்பில் வியட்நாமின் நினைவுச் சின்னங்கள்

வியட்நாம் என்பது தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு முக்கியமான நாடாகும். இதன் எல்லைகள் வடக்கில் சீனா, மேற்கில் லாவோஸ் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகள் மற்றும் கிழக்கிலும் தெற்கிலும் தென்சீனக் கடல் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. இந்த நாட்டின் தலைநகரம் ஹனோய் ஆகும், மேலும் ஹோ சி மின் நகரம் (முன்னாள் சாயி கான்) அதன் மிகப்பெரிய நகரமாகவும், வர்த்தக மையமாகவும் காணப்படுகிறது.

வியட்நாம் ஒரு நீளமான நாடாகவும், மலைகள், வயல்கள், ஆறுகள், கடற்கரை பகுதிகள் போன்ற இயற்கை வளங்களால் அழகாகக் கூடியதாகவும் உள்ளது. இந்த நாடு ஒரு வளமான வரலாற்றையும், கலாசார மரபுகளையும் கொண்டுள்ளது. வியட்நாமிய கலாசாரம் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் தாக்கங்களை வெளிப்படுத்துவதுடன், தனிப்பட்ட பாரம்பரிய அடையாளங்களையும் கொண்டுள்ளது.

வியட்நாம் மக்கள் பொதுவாக தொழிலாளர் சிந்தனையுடன் கூடியவர்களாகவும், சமுதாய அமைப்பை மதிக்கிறவர்களாகவும் இருக்கின்றனர். இந்த நாட்டின் சமையல் கலாசாரம் உலகம் முழுவதும் பிரபலமாக உள்ளது. இந்த நாடு இயற்கை அழகு, வரலாற்று வளங்கள் மற்றும் கலாசார தனிச்சிறப்புகளால் ஒரு முக்கிய சுற்றுலாத் தளமாகவும், பன்முகப் பார்வையாளர்களை ஈர்க்கும் இடமாகவும் உள்ளது. இந்த வகையில், வியட்நாம் இன்று உலக நாடுகளின் வரிசையில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ளதும், வளர்ச்சியின் பாதையில் உறுதியான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

ஆனால் அண்மை காலமாக நிலவி வரும் சீரற்ற காலநிலையானது அந்நாட்டின் நினைவு சின்னங்



பாலையா ரோஜனகுமார்
(ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. வியட்நாமின் மத்திய மாகாணத்தில் பெய்து வரும் வரலாறு காணாத கன மழை காரணமாக ஆயிரக்கணக்கான வீடுகளும், வரலாற்றுச் சிறப்பு மிக்க பழங்காலத் தளங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வானிலை ஆய்வாளர்களின் கூற்றுப்படி, கடந்த அக்டோபர் 27 ஆம் திகதி இரவு வரையான 24 மணி நேரத்தில் வியட்நாமில் வரலாற்றில் முதல்முறையாக சுமார் 1,085.8 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தொடர்ச்சியான கனமழை காரணமாக, வியட்நாமின் ஹியூ நகரத்தின் வரலாற்றுச் சின்னமாக அறியப்படும் பெர்ஃபியூம் நதியின் நீர்மட்டம் 4.62 மீற்றர் (சுமார் 15 அடி) உயர்ந்துள்ளது.

யுனெஸ்கோவால் பட்டியலிடப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஹோய் நகரிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வியட்நாமின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பெர்ஃப்யூன் நதி (Perfume River - Huong River) என்பது அந்த நாட்டின் மிக முக்கியமான மற்றும் அழகான இயற்கை வளங்களில் ஒன்றாகும். இது துவங்குவதிலிருந்து கடலில் கலக்கும் வரை, இயற்கை அழகு, வரலாறு, கலாசாரம், மற்றும் ஆழ்ந்த பண்பாட்டு அடையாளங்களை கொண்ட ஒரு முக்கியமான நதியாக விளங்குகிறது. ஹ்யூ (Hue) நகரம் வழியாக ஓடும் இந்த நதி, அதன் அமைதியான நீரோட்டத்தாலும், இரு கரைகளிலும் விரிந்த பழமையான கட்டிடங்களாலும், மக்களின் வாழ்க்கை முறைதத்துடனான இணைப்பாலும் சிறப்பாகத் திகழ்கிறது.

பெர்ஃப்யூன் நதியின் பெயருக்கு பின்னால் உள்ள வரலாறு மிகவும் சுவாரஸ்யமானது. பருவ காலங்களில் மலர்களால் நிரம்பிய மலையஞ்

தொடர்ச்சி▼



# அழிவின் விளிம்பில் வியட்நாமின் நினைவுச் சின்னங்கள்

தொடர்ச்சி▲

சல்களில் இருந்து வரும் நீர், ஒரு இயற்கையான மணம் கொண்டு செல்லும் என்பதாலேயே "Perfume River" என அழைக்கப்படுகிறது. இதுவே இந்த நதியின் சிறப்பு. குறிப்பாக ஹ்யூ நகரத்தின் பெருமைக்குரிய வரலாற்றில் இந்த நதிக்கு முக்கிய பங்கு உண்டு. ஹ்யூ நகர், வியட்நாம் பேரரசர்களின் பழமையான தலைநகராக இருந்த போது, அரச அரண்மனைகளும், பௌத்த கோவில்களும், மற்றும் பல முக்கிய கட்டடங்களும் இந்த நதிக்கரையில் கட்டப்பட்டது. இந்த நதிக்கரையில் அமைந்துள்ள தியென் மூ கோவில் (Thien Mu Pagoda) மிகவும் புகழ்பெற்ற ஒரு ஆன்மிகப் புனிதத்தலமாகும். இது பாரம்பரிய வியட்நாமிய கட்டிடக் கலைக்கே ஓர் எடுத்துக் காட்டு.

பெர்ஃப்யூன் நதி வியட்நாமிய கவிதைகளில், பாடல்களில், கலைகளில் பெருமளவில் புகழப்பட்டிருப்பது, அதன் பண்பாட்டுப் பெருமையை பிரதிபலிக்கிறது. இந்நதி சுற்றுலாவுக்கு உகந்ததோடு மட்டுமல்லாமல், அதன் பசுமை மற்றும் அமைதி, அந்த ஊரின் அடையாளமாகவும் திகழ்கிறது. பெர்ஃப்யூன் நதியின் இரு கரையிலும் படகு சவாரி, மாலை நேர பசுமை காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை சுற்றுலாப் பயணிகளுக்கு அதிர்ச்சி தரும் அனுபவமாக அமைகின்றன.

இதற்கிடையில், பெர்ஃப்யூன் நதி, ஹ்யூ நகரத்தின் பொருளாதாரத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது. மீன்பிடி, நீர்நிலைக் குடி தண்ணீர் பயன்பாடு, மற்றும் சுற்றுலா ஆகியவையில் இந்த நதி ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. இந்த வகையில், பெர்ஃப்யூன் நதி என்பது வியட்நாமின் வரலாற்று, கலாசார, மற்றும் இயற்கை அடையாளங்களை ஒருங்கிணைக்கும் ஓர் அரிய இயற்கை ஆஸ்தியாகவே பார்க்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் வியட்நாமில் உள்ள பெர்ஃப்யூன் நதி (Perfume River / Huong River) எதிர்கொண்ட நிலைமை, கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்ட காலநிலை மாற்றங்களும், மனித செயற்பாடுகளும் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் ஏற்பட்ட வரலாறு காணாத கனமழையின் தாக்கம், இந்த நதியின் இயற்கை நிலைப்பாட்டையும், அதன் சுற்றுப்புறச் சூழலையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. பெரும் மழை காரணமாக பெர்ஃப்யூன் நதி உள் வாங்கக் கூடிய அளவை விட அதிகமாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், நதி தன்னிச்சையாக கரைமீறிப் பாய்ந்தது. இந்த வெள்ளப் பெருக்கு, ஹ்யூ நகரத்தில் அமைந்துள்ள பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் மற்றும் பக்திப் பண்பாட்டுத் தளங்களை சூழ்ந்தும், சேதப்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, நதிக்கரையில் அமைந்துள்ள தியென் மூ கோவில் மற்றும் பிற சின்னமான கட்டடங்கள் வெள்ள நீரில் மூழ்கியதால், இவற்றின் பாதுகாப்பும், புனரமைப்பும் அவசர தேவையாக மாறியுள்ளது. இது அந்த நகரின் பாரம்பரியத்துக்கும், சுற்றுலாத்துறைக்கும் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், பெர்ஃப்யூன் நதியின் நீர்தரமும், அதன் சுற்றுசூழல் சமநிலையும் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. தூய்மையற்ற நீர், மழைநீர் வடிகால்களில் இருந்து பரவிய கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் குப்பைகள் போன்றவை நதியில் கலப்பதற்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளன. இதனால், மீன்வளங்கள் மற்றும் பிற நீர்வாழ் உயிரினங்கள் ஆபத்தில் உள்ளன. இதற்கிடையில், வியட்நாமின் சுற்றுசூழல் பாதுகாப்பு துறை, பெர்ஃப்யூன் நதியின் இயற்கை நிலையை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

நீரின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அணைகள், கழிவுநீரை வடிகட்டும் நவீன இயந்திரங்கள், மற்றும் கரையோர ஆக்கிரமிப்புகளை கட்டுப்படுத்தும் சட்ட நடவடிக்கைகள் போன்றவை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு, அண்மைக் காலத்தில் பெர்ஃப்யூன் நதி எதிர்கொண்ட வெள்ளத்தால் அதன் இயற்கை

தொடர்ச்சி▼

# அழிவின் விளிம்பில் வியட்நாமின் நினைவுச் சின்னங்கள்

தொடர்ச்சி▲

அமைப்பு, சுற்றுசூழல், மற்றும் பாரம்பரியத்திற்கே பெரும் ஆபத்தாக அமைந்துள்ள நிலையில், அதை பாதுகாக்கும் முயற்சிகள் அவசரத் தேவையாக எழுந்துள்ளன. நதியின் இயற்கை அழகும், வரலாற்றுப் பங்களிப்பும் இனி சந்ததிக்க பயனளிக்க வேண்டும் என்ற நோக்கில், அரசு மற்றும் சுற்றுசூழல் ஆர்வலர்கள் இணைந்து செயற்பட வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது.

அதேபோல் வரலாற்று சிறப்புமிக்க ஹோய் அன்ஸ் நகரமும் அழிவின் விளிம்புக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளன. வியட்நாமில் அமைந்துள்ள ஹோய் அன்ஸ் (ருழர யுெ) நகரம், அந்த நாட்டின் மிக முக்கியமான வரலாற்று சிறப்பு மிக்க நகரங்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. இது வியட்நாமின் மத்திய பகுதியில், குவாங் நம் மாகாணத்தில், துறைமுக நகரமாக அமைந்துள்ளது. 15ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை ஹோய் அன்ஸ் ஒரு முக்கியமான சர்வதேச வர்த்தக மையமாக இருந்தது. அந்தக் காலத்தில் சீன, ஜப்பானிய, இந்திய, மற்றும் ஐரோப்பிய வர்த்தகர்கள் இங்கு வந்து நிலைபெற்றதாலும், நகரம் கலாசார நெருக்கங்களை அழகாக பிரதிபலிக்கும் இடமாக மாறியுள்ளது. ருநேஸ்ஊழு உலக பாரம்பரிய தளமாக 1999 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ஹோய் அன்ஸ், அதன் சிறப்பான பாரம்பரியக் கட்டிடக்கலையின் காரணமாக பெருமைப்படுகிறது. நகரத்தில் காணப்படும் பழமையான வீடுகள், கோவில்கள், வணிகக் கட்டடங்கள் ஆகியவை வியட்நாமிய, சீன, ஜப்பானிய மற்றும் ஐரோப்பிய கட்டடக் கலையின் கலவியால் ஆனவை. குறிப்பாக ஜப்பானியக் கூட்டுப்பாலம் (Japanese Covered Bridge) என்பது ஹோய் அன்ஸின் அடையாளமாகவும், அதன் சர்வதேச வரலாற்றின் சான்றாகவும் திகழ்கிறது.

இன்றைய ஹோய் அன்ஸ் நகரம், சுற்றுலாத் துறையில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. நகரின் மையப் பகுதி, போக்குவரத்திலிருந்து விடுபட்டதாகவும், நடைபாதை மற்றும் சைக்கிள் பயணங்களுக்கு ஏற்றதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மின்னமுத்த விளக்குகள் ஒளிரும் மாலை நேரத்தில் இந்த நகரம், ஓர் கனவுலகை நினைவூட்டும் அளவுக்கு அழகாக மாறுகிறது. அத்துடன், நகரில் நடத்தப்படும் பல கலாசார நிகழ்வுகள், பாரம்பரிய கைத்தொழில்கள், மற்றும் உணவுப் பெருந்தொகை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. ஹோய் அன்ஸில் வாழும் மக்கள், இன்னும் பாரம்பரிய வாழ்க்கையை பின்பற்றுகின்றனர். பனை இலை வேலைப்பாடுகள், கையால் செய்யப்படும் துணி மற்றும் ஆடை உற்பத்தி, புகழ்பெற்ற 'லந்தர்ன்' தயாரிப்பு ஆகியவை இந்த நகரத்தின் அடையாளமாக விளங்குகின்றன. வியட்நாமிய சைவ மற்றும் அசைவ உணவுகளும், பாரம்பரிய முறையில் தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தங்களும், நகரத்தின் பண்பாட்டு செழுமையை வெளிக்கொணர்கின்றன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஹோய் அன்ஸ் நகரம் தற்போது பாதுகாப்புக்கும், புனரமைப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் நகரமாகும். நகரின் பாரம்பரியத்தை காப்பாற்றும் வகையில் கட்டடங்கள் பழுது பார்க்கப்படுகின்றன, சுற்றுசூழல் சீரமைப்பும் மேற்கொள்ளப்படுகிறது. உலகின் பல புனித மையங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இந்த நகரம், வியட்நாமின் பண்பாட்டுப் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொல்லும் ஓர் அரிய தளமாகும். இதனால், ஹோய் அன்ஸ் நகரம், வியட்நாமின் வரலாற்றையும், கலாசார அடையாளங்களையும், பாரம்பரியக் கலைகளையும் ஒரே நேரத்தில் வெளிக்கொணரும், அரிய நகரமாகவும், உலக பாரம்பரியத்தின் ஓர் முக்கிய தளமாகவும் இன்று நிலவி வருகிறது. அண்மை காலங்களில் காலநிலை மாற்றம் உலகம் முழுவதும் பல்வேறு மாற்றங்களையும் சவால்களையும் ஏற்படுத்தி வரும் நிலையில், வியட்நாமில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஹோய் அன்ஸ் நகரமும் இதன் தாக்கத்திலிருந்து விலகாமல் பாதிக்கப்பட்டுள்ளது. கடல் மட்ட உயர்வும், திடீர் பருவ மழைகளும், வெப்பநிலை மாற்றங்களும் இந்த நகரத்தின் இயற்கை, சமூக மற்றும் பண்பாட்டு சூழலை பெரிதும் பாதித்துள்ளன.

முதற்கட்டமாக, கடைசிக் காலங்களில் ஹோய் அன்ஸ் நகரில் பெருமளவிலான கனமழைகள் ஏற்பட்டு, நகரத்தின் பல பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதாகவும், அதனால் வரலாற்று சிறப்புடைய கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக, யுனெஸ்கோ பாரம்பரியப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஜப்பானியக் கூட்டுப்பாலம் உள்ளிட்ட கட்டிடங்கள், நீண்டகால வெள்ளநீர் கசியலால் பழுது காணப்பட்டுள்ளன. இதனால் பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் பழமை விலக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது. இதே வேளை, கடல் மட்ட உயர்வும் ஹோய் அன்ஸ் நகரை கடுமையாக பாதிக்கக்கூடிய அபாயமாக திகழ்கின்றது. நகரம் வியட்நாமின் கடலோரப் பகுதியிலுள்ளதால், கடற்கரை அழிவு, மண் அரிப்பு போன்ற இயற்கை மாற்றங்கள் நகரத்தின் நிலத்தடங்களையும் சுற்றுசூழலையும் மாற்றியமைத்து வருகின்றன. இதனால் விவசாயம், மீன்வளம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பலவகை வாழ்வாதாரங்களும் பாதிப்பை சந்திக்கின்றன.

இவ்வாறான தாக்கங்கள் வியட்நாமின் சுற்றுலா துறையின் வளர்ச்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக காணப்படுவதோடு பாரம்பரியமாக பேணி பாதுகாத்துக் கொண்டு வரப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க அடையாளங்கள் அழிவுக்கு உள்ளாக்கப்படுவது அனைவரிலும் உள ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வரலாற்று சிறப்புமிக்க ஆவணங்கள் என்பது ஒரு இனத்தின் அடையாளமாக பார்க்கப்படும். இந்நாட்டின் குறித்த காலநிலை மாற்றமானது ஒரு பேரிடராகவும், அனைவர் மத்தியிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி அவர்களை பெரிதும் பாதிப்புக்கு உட்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயம் ஆகும். மேலும் ஆய்வாளர்களின் கூற்றுப்படி, வியட்நாம் வெள்ள அபாயமிக்க நாடாகவும், அந்நாட்டின் பெரும்பாலான மக்கள் அதிக வெள்ள அபாயமுள்ள பகுதிகளில் வசித்து வருவதாகவும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்தமை முக்கிய விடயமாகும்.



# பாடசாலை நேர நீடிப்பு: கல்வி சீர்திருத்துமா...? மாணவருக்கு சுமையா...?



ஜிந்துஜா வியாஜகுமார்
(ஊடககற்கைகள் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அடுத்த வருடத்தின் தை மாதத்திலிருந்து பாடசாலை நேரம் பிற்பகல் 2 மணிவரை நீடிக்கப்படும் என்று இலங்கையின் கல்வி அமைச்சு தீர்மானம் மேற்கொண்டுள்ளது. மேலும் இந்த முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை என்று கல்வியமைச்சு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. தேசிய கல்வி நிறுவகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட இந்த முடிவு, கல்வி அமைப்பின் சீர்திருத்த முயற்சியின் ஒரு பகுதியாகும் என்றும், அதிலிருந்து பின்வாங்கங்கப் போவதில்லை என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், இந்தத் தீர்மானம் கல்வி மேம்பாட்டுக்கான ஒரு நன்மைமிக்க முயற்சியா, இல்லை எனில் மாணவர்கள் மீதான ஒரு புதிய சுமையா? என்பதே இப்போது கல்வி வட்டாரங்களில் எழும் முக்கியக் கேள்வியாக மாறியுள்ளது.

அந்தவகையில், இந்தத் திட்டத்தின் ஆதரவாளர்கள், பாடசாலை நேர நீடிப்பு மாணவர்களுக்கு ஆழமான கற்றல் அனுபவத்தை வழங்கும் என நம்புகின்றனர்.

தற்போதைய பாடத்திட்டம் பரந்தளவிலான தலைப்புகளை உள்ளடக்கியிருப்பதால், கூடுதல் நேரம் கிடைத்தால் ஆசிரியர்கள் பாடங்களை விரிவாக எடுத்துரைக்க முடியும் எனவும் இதனால் மாணவர்கள் “பரீட்சைக்காக மட்டுமே கற்பது” என்ற பழக்கத்தில் இருந்து விலகி, உண்மையான அறிவு அனுபவத்தை பெற வாய்ப்புண்டாகும் என நம்பப்படுகின்றது.

மேலும், கூடுதல் நேரம் மாணவர்களை இணைப்பாடவிதானச் செயல்பாடுகளில் ஈடுபடச் செய்து, அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் உதவலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான பல நன்மைகள் இருந்தாலும் இதன் நிஜம் வேறு முகத்தைக் கொண்டுள்ளது. அதன்படி, பாடசாலை நேர நீடிப்பு திட்டத்திற்கும் பாதகங்கள் பெரிதாகவே உள்ளன.

முதலாவதாக, நீண்ட நேரம் இடைவெளியின்றிக் கற்றல் செய்வது மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கும் அபாயம் உள்ளது.

காலை முதல் பிற்பகல் 2 மணி வரை பாடங்களைக் கற்கும் மாணவர்கள் மனதளவில் சோர்வடைவார்கள். இது அவர்களின் கவனக் குவிப்பு திறனையும் கற்றல் உந்துதலையும் குறைக்கும் வாய்ப்பு அதிகம்.

வெப்பமான காலநிலையிலான பிற்பகல் நேரப் பாடங்கள் பயனுள்ளதாக அமையாது என்பது பல ஆசிரியர்களின் அனுபவ பூர்வமான கருத்தாகும்.

மேலும், கிராமப்புற மாணவர்கள் போக்குவரத்து சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். சிலர் தூரப் பகுதிகளில் இருந்து பாடசாலைக்கு வருவதால், வீடு திரும்பும் நேரம் மேலும் தாமதமாகும். இதனால் அவர்களின் ஓய்வும், வீட்டுப் படிப்பும் பாதிக்கப்படும். ஆசிரியர்களின் நிலையும் அதே போல். பணிநேரம் நீடிப்பதால், அவர்களின் தனிப்பட்ட நேர ஒழுங்கும் குடும்ப வாழ்க்கையும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

அதனால், “மாணவரின் நலனுக்காக” என்ற பெயரில், ஆசிரியரின் நலனும் மறைக்கப்படக் கூடாது. இவ்வாறான பல சிக்கல்கள் இருப்பதினால் இந்தத் திட்டத்திற்குரிய மாற்று வழி தேவை என்பது மிக முக்கியமாகின்றது . கல்வி அமைச்சின் நோக்கம் நல்லதாய் இருந்தாலும், நேர நீடிப்பு என்பது தர மேம்பாட்டின் அடையாளம் அல்ல.

கல்வியின் சீர்திருத்தம் என்பது பாடசாலை நேரத்தை நீட்டிப்பது அல்ல பாடத்திட்டத்தின் தரத்தையும் பொருத்தத்தையும் உயர்த்துவதில்தான் இருக்க வேண்டும்.

பாடநேரத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக, பாடத்திட்டத்தை மீளாய்வு செய்து அவசியமற்ற பகுதியைச் சுருக்குதல் சிறந்த தீர்வாக அமையும். அதேவேளை, மாணவர்களின் கற்றல் திறனை வளர்க்கும் புதிய கற்பித்தல் முறைகள் - தொழில்நுட்பம், அனுபவ அடிப்படையிலான கற்றல், குழுக் கற்றல் போன்றவற்றைச் செயல்படுத்துவதுதான் கல்வியை உயிர்ப்பிக்கும் வழியாகும்.

அதன்படி, பாடசாலை நேர நீடிப்பு ஒரு சீர்திருத்த

தொடர்ச்சி▼

# பாடசாலை நேர நீடிப்பு: கல்வி சீர்திருத்தமா...? மாணவருக்கு சுமையா...?

தொடர்ச்சி▲

முயற்சியாக தோன்றினாலும், அது மாணவர்களின் நலனையும் மன அமைதியையும் புறக்கணிக்கக் கூடாது. கல்வி என்பது நேர அடிப்படையில் அளக்கப் படக் கூடிய ஒன்று அல்ல் அது தரத்தின் அடிப்படை யில் மதிப்பிடப்பட வேண்டியது.

அதனால், கல்வியமைச்சு இந்த முடிவை நடை முறையில் அமுல்படுத்துவதற்கு முன், மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோரின் கருத்துகளையும் நன்கு பரிசீலிக்க வேண்டும். கால அளவில் அல்ல, தர அளவில் மேம்படும் கல்வியே உண்மையான முன்னேற்றத்துக்கான விதையாகும்.




# ஹோலிரூட் தேயிலைத் தொழிற்சாலை 2025 இல் தங்கப் பரிசை வென்றுள்ளது





NATIONAL CLEANER PRODUCTION AWARDS 2025

Conducted by

National Cleaner Production Centre, Sri Lanka

under the aegis of

Ministry of Industry & Entrepreneurship Development

This is to certify that

Talawakelle Tea Estates PLC - Holyrood Tea Factory

is honoured with

GOLD AWARD

Tea Sector - Medium Category

06th November 2025

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

ஹோலிரூட் தேயிலை தொழிற் சாலை தேசிய சுத்தமான உற்பத்தி விருதுகள் 2025 இல் தங்கப் பரிசை வென்றுள்ளது.

தலவாக்கலை டீ எஸ்டேட்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் ஹோலிரூட் தேயிலை தொழிற்சாலை, தேயிலை துறை – நடுத்தர பிரிவு வகையில் தங்க விருது பெற்றுள்ளது.

இவ்விருது, தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயல்படும் இலங்கை தேசிய சுத்தமான உற்பத்தி மையத் தால் (NCPC) நடத்தப்பட்ட தேசிய சுத்த மான உற்பத்தி விருதுகள் 2025 விழாவில் வழங்கப்பட்டது.

சுத்தமான உற்பத்தி, வளங்கள் திறமையாக பயன்படுத்துதல், கழிவு குறைப்பு மற்றும் நிலைத்துத் திகழும் தொழில்துறை நடைமுறைகளில் சிறந்த பங்களிப்புகளை வழங்கும் நிறுவனங்களை இவ்விருது கௌர விக்கிறது.

இந்த உயரிய தங்க விருது, தொழில் மற்றும் தொழில் முனை வோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹண்டுன்னெத்தி அவர்களால் வழங் கப்பட்டது.ஹோலிரூட்தேயிலைதொழிற் சாலை, சுற்றுச்சூழல் நட்பு உற்பத்தி முறைகள் மற்றும் ஆற்றல் திறன் மேம் பாட்டில் செய்துள்ள சிறப்பான பங் களிப்புக்காக இவ்விருதைப் பெற் றது.

தலவாக்கலை டீ எஸ்டேட்ஸ் பிஎல்சி இவ்விருதைப் பெறுவதில் பெருமை தெரிவித்ததுடன், இலங்கை யின் தேயிலை தொழில்துறையில் நிலைத்த உற்பத்தி நடைமுறை களைத் தொடர்ந்து முன்னெடுக்க உறுதியளித்தது.



# ஒன்பது வளைவு பாலம் ஒரு பொருளியல் அதிசயம்

**கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா,**
**(ஊடகக்கற்கைகள் துறை**
**யாழ்.பல்கலைகழகம்)**

இலங்கையின் மத்திய மலைப் பகுதிகளின் பசுமையான தேயிலைத் தோட்டங்களுக்கும், அடர்ந்த வனப்பகுதிகளுக்கும் மத்தியில், வானவில்லின் வளைவுகளைப் போல அழகாகக் காட்சியளிக்கும் ஒரு பொறியியல் அற்புதம் உள்ளது. அதுவே ஒன்பது வளைவு பாலம் (Nine Arch Bridge) ஆகும். "வானத்தில் பாலம்" (Bridge in the Sky) என்றும் அழைக்கப்படும்.

இது, பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது இலங்கையில் அமைக்கப்பட்ட ரயில் பாதைக் கட்டுமானங்களில் ஒரு சிறந்த உதாரணமாக இன்றுவரை நிலைத்திருக்கிறது. பதுளை – கொழும்பு ரயில் பாதையில், எல்ல மற்றும் தெமோதர ரயில் நிலையங்களுக்கு இடையே அமைந்துள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பாலம், அதன் தனித்துவமான வடிவமைப்பு, கட்டப்பட்ட விதம் மற்றும் இயற்கை எழில் காரணமாக உலகெங்கிலும் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகிறது.

9 வளைவு பாலம் கட்டப்பட்ட வரலாற்றுப் பின்னணியைச் சற்று நாங்கள் நோக்கினால், விடாமுயற்சியின் வெற்றிச் சின்னம் ஒன்பது வளைவு பாலத்தின் வரலாறாகிறது. பிரித்தானியரின் ரயில் பாதை விரிவாக்கத் திட்டத்தின் சவாலான ஒரு காலகட்டத்தோடு பிணைந்துள்ளது. தேயிலை மற்றும் ஏனைய பொருள்களைத் துறைமுகங்களுக்குக் கொண்டு செல்வதற்காகப் பிரித்தானிய அரசு இலங்கையின் மலையகப் பகுதிக்கு ரயில் பாதையை விரிவுபடுத்தும் பணியில் ஈடுபட்டது. இந்த ரயில் பாதை அமைக்கும் பணியின் போது, இரண்டு மலைகளுக்கு இடையில் இருந்த பெரிய பள்ளத்தாக்கை இணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த சவாலான பணியை மேற்கொள்ளவே இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டது.

இந்த வளைவுப் பாலத்தின் கட்டுமானமானது 1913 ஆம் ஆண்டு தொடங்கி 1921 ஆம் ஆண்டளவில் நிறைவடைந்தது . இதன் முக்கிய சிறப்பு என்னவென்றால், உலகின் முதல் உலகப் போரின் (1914-1918) காரணமாக பிரித்தானியப் போர்த் தேவைகளுக்காக v/F (Steel) விநியோகத்தில் ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக, பாலம் கட்டுவதற்கான எஃகு கிடைக்கவில்லை. இதனால், வழக்கமான கட்டுமான முறையைப் பின்பற்றுவதில் பொறியியலாளர்களுக்குப் பெரிய சவால் ஏற்பட்டது. இருப்பினும், அந்தச் சவாலைச் சமாளித்து, உள்ளூர் கட்டுமானத் திறமை மற்றும் கிடைக்கக்கூடிய பொருட்களை மட்டுமே பயன்படுத்தி இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டது.

இதில் முக்கியமாக, உள்ளூர் கட்டடக் கலைஞரானபி.கே.அப்புஹாமி(P.K.Appuhami) என்பவரின் பங்கு அளப்பரியது எனக் கூறப்படுகிறது. பிரித்தானியப் பொறியியலாளர்களுடன் இணைந்து, அப்புஹாமி மற்றும் அவரது குழுவினர், எஃகுக்குப் பதிலாக திடமான பாறைகள், செங்கற்கள் மற்றும் சிமெண்ட் கலவையைப் பயன்படுத்தி முழுப் பாலத்தையும் கட்டியெழுப்பினர்.

எஃகு இல்லாமல் கட்டப்பட்ட ஒரு பாரிய ரயில் பாலம் பல ஆண்டுகளாகத் தாக்குப் பிடிப்பது, அக்காலக் கட்டத்தின் கட்டுமானத் திறமைக்கு ஒரு மகத்தான சான்றாகும். சுமார் 300 அடி நீளம் (91

தொடர்ச்சி▼



# ஒன்பது வளைவு பாலம் ஒரு பொருளியல் அதிசயம்

தொடர்ச்சி▲

மீற்றர்), 25 அடி அகலம் மற்றும் 80-100 அடி உயரம் கொண்ட இந்தப் பாலம், அதன் ஒன்பது நேர்த்தியான வளைவுகள் காரணமாகவே ஒன்பது வளைவு பாலம் எனப் பெயர் பெற்றது. ஒருபுறம் உள்ளூர் அறிவுக்கும், மறுபுறம் நவீன பொறியியல் வடிவமைப்புக்கும் கிடைத்த வெற்றிச் சின்னமாக இது பார்க்கப்படுகிறது. வடிவமைப்பாளராக ஹரல்ட் குத்பேர்ட் மார்வூட் (Harold Cuthbert Marwood) என்பவரும், கட்டுமானத்தில் முன்னோடியாக டி.ஜே. விமலசுரேந்திரா (D.J. Wimalasurendra) போன்ற உள்ளூர் மற்றும் பிரித்தானியப் பொறியியலாளர்களும் ஈடுபட்டனர்.

இப்படிப்பட்ட ஒரு பொறியியல் அதிசயம் இன்று ஒரு முக்கிய சுற்றுலாத் தளமாக விளங்குகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஒன்பது வளைவுப்பாலம், அதன் பிரமாண்டமான கட்டுமானம், பசுமையான சூழல் மற்றும் ரயில் பாலத்தைக் கடந்து செல்லும் கண்கவர் காட்சி ஆகியவற்றால் இன்று இலங்கையின் கட்டாயம் பார்க்க வேண்டிய சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக மாறியுள்ளது. ஒரு காலத்தில் நாட்டின் போக்குவரத்து மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முக்கிய வழியாக இருந்த இந்த பாலம் தற்போது உலகம் முழுவதிலுமிருந்து வரும் பயணிகளை ஈர்க்கும் ஒரு காந்தமாகத் திகழ்கிறது.

சுற்றுலாப் பயணிகள் எல்ல நகரில் இருந்து இலகுவாக இந்தப் பாலத்தை அடைய முடியும். ரயில் தண்டவாளத்தின் வழியாகவோ அல்லது அதைச் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டங்களின் ஊடாகவோ நடந்து செல்வது ஒரு தனித்துவமான அனுபவத்தைத் தருகிறது. பாலத்தைச் சுற்றியுள்ள அடர்ந்த தாவரங்களும், பனிமூட்டம் சூழ்ந்த மலைகளும், கீழே உள்ள பள்ளத்தாக்கும் தரும் காட்சிக் கோணம், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் சாகசப் பிரியர்களுக்கு ஓர் அற்புதமான களமாக அமைகிறது.

குறிப்பாக, ரயில் பாலத்தின் மீது மெதுவாக ஊர்ந்து செல்லும்போது அதைப் பார்ப்பது ஒரு மறக்க முடியாத காட்சியாகும். இலங்கையின் பழைய காலத்தில் இருந்த நீல நிற மற்றும் சிவப்பு நிற ரயில்கள் தேயிலைத் தோட்டங்களுக்கும், வளைவுகளுக்கும் மத்தியில் செல்லும்போது, அந்தக் காட்சி ஒரு அஞ்சல் அட்டையைப் போலவே மிகவும் நேர்த்தியாக இருக்கும். பல வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகளைப் பொறுத்தவரை, எல்லப் பயணத்தின் உச்சக் கட்டமே இந்தக் காட்சியைப் பார்ப்பதும், அதன் வரலாற்றை அறிந்துகொள்வதும்தான்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், இந்தப் பாலத்தை ஒட்டி பல சிறிய கடைகள், தேநீர் விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள் உருவாகியுள்ளன. சிலர் இந்தப் பாலத்தை உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்து வருகின்றனர். அதன் அற்புதமான பொறியியல், இயற்கையின் பின்னணியில் உள்ள அழகு மற்றும் அதன் எளிய கட்டுமானக் கதை ஆகியவற்றின் காரணமாக, ஒன்பது வளைவுப் பாலம் என்பது வெறும் ஒரு ரயில் பாலம் என்பதையும் கடந்து அது இலங்கையின் வரலாற்றுச் சுவடுகளைச் சுமந்து நிற்கும், பல நூற்றாண்டுகளாகத் தலைமுறைகளைக் கடந்து மக்களை மகிழ்விக்கும் ஒரு பொறியியல் மற்றும் இயற்கைச் சுற்றுலா அதிசயம் ஆகும். இது காலனித்துவ பொறியியல் திறமைக்கும், உள்ளூர் வள மேலாண்மைக்கும், வரலாற்று உறுதிப்பாட்டுக்கும் ஒரு அழியாச் சான்றாகும்.




# மாவீரர் தினத்தை முன்னிட்டு இறைச்சிக் கடைகளுக்குப் பூட்டு!

## சாவகச்சேரி பிரதேச சபை ஏகமனதாகத் தீர்மானம்

(த.சுபேசன்)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற இறைச்சிக் கடைகள் மற்றும் மதுபான சாலைகள் ஆகியவை எதிர்வரும் மாவீரர் தினத்தன்று மூடுவதற்கு பிரதேச சபை ஏகமனதாக தீர்மானித்திருக்கின்றது.

சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் இ.யோகேஸ்வரன் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட அமர்வில் மேற்படி விடயம் தொடர்பாக கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்த நிலையில் அதற்கு சக உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கி மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்வரும் 27 ஆம் திகதி சபை எல்லைக்கு உட்பட்ட சகல இறைச்சிக் கடைகள் மற்றும் மதுபான சாலைகள் ஆகியவற்றை மூடுவது குறித்து முடிவு எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# குளவி கொட்டுக்கு இலக்காகிய 5 மாணவர் வைத்தியசாலையில்

(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)

குளவி கொட்டுக்கு இலக்காகிய 05 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் பயிற்சிகளை மேற்கொள்ள வந்த ஐந்து மாணவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று (14) வெள்ளிக்கிழமை காலை 9:30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்று என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ மோரார் பகுதியில் அமைந்துள்ள தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் பயிற்சிக்காக வருகை தந்த மாணவர்கள் இன்று மோரா தோட்ட பகுதிக்கு தமது பயிற்சிகளை மேற்கொண்டிருந்த பொழுது மரத்திலிருந்த குளவி கலைந்து வந்து இந்த மாணவர்களை தாக்கியதாக ஆரம்ப கட்டம் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஐந்து மாணவர்களும் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு இவர்கள் குறித்து அச்சம் அடையத் தேவையில்லை என்று பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த மாணவர்களுக்கான பயிற்சிநெறி இன்று மாத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கனமழையால் நீரில் மூழ்கிய வயல் நிலங்கள்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை தம்பலகாமம், கிண்ணியா பகுதியில் கனமழை காரணமாக விதைத்து ஒரு சில நாள்கள் கடந்த நிலையில் நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளது.

நேற்று (13) பெய்த கனமழை காரணமாக குறித்த பகுதி விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தம்பலகாமம் கோயிலடி தாயிப் நகர் வீதியை அண்மித்த பகுதி வயல் நிலங்கள் மற்றும் கிண்ணியா சூரங்கல் கற்குழி பகுதி நெற் செய்கை விவசாய நிலங்களே இவ்வாறு மூழ்கியுள்ளன.

பெரும்போக நெற் செய்கைக்காக விதைப்பு நடவடிக்கை மேற்கொண்டு ஓரிரு நாள்களின் பின் கனமழை பெய்ததால் பல ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளது.

தற்போது சில பகுதிகளில் நெற் செய்கைக்கான விதைப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

கனமழை காரணமாக நீரில் மூழ்கிய வெள்ள நீர் படிப்படியாக வடிந்தோடுகிறது. அதன் பின்னரே சேத விவரங்கள் தெரியவரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இளைஞர் பரிமாற்று வேலை திட்டத்தின் கீழ் களுத்துறை இளைஞரால் பளையில் சிரமதானம்

(பூ.லின்ரன்)

இளைஞர் பரிமாற்று வேலை திட்டத்தின் கீழ் களுத்துறை இளைஞர்களால் கிளிநொச்சி பளை பகுதியில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நட பெற்று வரும் இளைஞர் பரிமாற்று வேலை திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த இளைஞர்கள் யுவதிகள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளனர்.

வருகை தந்த இளைஞர் யுவதிகளால் இன்றய தினம் காலை 9:30 மணியளவில் மாசார் சிறுவர் ஆனந்த சுற்றுப்பகுதியில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்ட்டது.

இவ் இளைஞர் யுவதிகளால் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்க படவுள்ளதாகவும் குறிப்பாக மர நடுகை கலை கலாச்சாரம் சார்ந்த நிகழ்வுகள் உணவுப் பழக்கம் மற்றும் சமய வழிபாடுகள் திட்டமிடபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மற்றும் இவ் சிரமதான பணியில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோ–கத்தர்கள் மற்றும் மாசார் கிராம அலுவலர் மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் சுஜீபன் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# தேர்தல் ஆணையத்தை கண்டித்து த.வெ.க. சார்பில் ஆர்ப்பாட்டம்

தேர்தல் ஆணையத்தை கண்டித்து தவெக சார்பில் நாளை மறுதினம் 16 ஆம் திகதி தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதில், அக்கட்சியின் தலைவரான நடிகர் விஜய் கலந்துகொள்ள உள்ளார்.

தமிழகம், மேற்குவங்கம், கேரளா உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணி நவம்பர் 4 முதல் ஒரு மாதம் நடத்தப்படும் என அண்மையில் தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதையடுத்து, அதற்கான பணியும் முடுக்கி விடப்பட்டது.

இதற்கு தி.மு.க, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் உள்பட மேலும் சில கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதோடு மட்டும் அல்லாமல் அண்மையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைமையில் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் வாக்காளர்



பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது என முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, கடந்த 3 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் திமுக வழக்கு தொடர்ந்தது. இதேபோல், மேலும் சில மாநில கட்சிகள் சார்பிலும் வழக்கு தொடரப்பட்டது. இதுஒருபுறம் இருக்க அ.தி.மு.க. சார்பில் இடைமீட்டு மனு தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என அக்கட்சி சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கு பா.ஜ.க, அ.தி.மு.க. உள்பட மேலும் சில கட்சிகள் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது.

த.வெ.க. இந்த விவகாரத்தில் மௌனம் காத்து வந்தது. இந்நிலையில், அந்த கட்சியும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலம் முழுவதும் வரும் நாளை மறுதினம் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளது. இந்த முடிவை விஜய் எடுத்துள்ளதாக அக்கட்சியினர் தெரிவித்தனர். இதையடுத்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. சென்னையை பொருத்தவரை ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற உள்ளது. இதற்கு பொலிஸாரிடம் அனுமதியும் கேட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தில் நடிகர் விஜய் ஏதாவது ஒரு மாவட்டத்தில் கலந்து கொள்ள முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# மீண்டும் நவம்பர் இறுதியில் பழனிசாமி சுற்றுப்பயணம்

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி நவம்பர் மாத இறுதியில் மீண்டும் தேர்தல் சுற்றுப்பயணத்தை தொடங்க உள்ளார். அதன்பின், 5 இடங்களில் மண்டல மாநாடுகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகள் தெரிவித்தனர்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பிரசாரப் பயணத்தை கடந்த ஜூலை 7 ஆம் திகதி தொடங்கினார். தமிழகம் முழுவதும் இதுவரை 5 கட்டங்களாக நடைபெற்ற தேர்தல் சுற்றுப்பயணத்தில் மொத்தம் 172 சட்டப்பேரவை தொகுதிகளில் பிரசாரம் மேற் கொண்டார்.

தற்போது மீண்டும் அவர் இம்மாத



இறுதியில் தேர்தல் சுற்றுப்பயணத்தை தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அ.தி.மு.கவை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் தெரிவிக்கையில், "அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி இதுவரை 5 கட்டங்களாக 172 சட்டப்பேரவைத் தொகுதிகளில் தேர்தல் சுற்றுப்பயணம் செய்து முடித்துள்ளார். இதற்கிடையே தீபாவளி பண்டிகை, வடகிழக்கு பருவமழை உள்ளிட்ட காரணங்களால் தேர்தல் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை.

இந்நிலையில், மீதமுள்ள 62 தொகுதிகளில் இம்மாத இறுதியில் தொடங்க திட்டமிட்டுள்ளார். எப்போது இருந்து தொடங்குவது? எந்தெந்த தொகுதிகளில் பிரசாரம் மேற்கொள்வது என்பது குறித்த ஆலோசனை நடைபெற்று வருகிறது. விரைவில் இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும்.

234 தொகுதிகளிலும் பிரச்சாரம் செய்து முடித்தபின், அடுத்தகட்டமாக அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் மதுரை, கோவை, திருச்சி, வேலூர், விழுப்புரம் ஆகிய 5 இடங்களில் பிரம்மாண்டமான முறையில் மண்டல மாநாடுகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது." என்று தெரிவித்தனர்.

# விஜய் என்.டி.ஏ. கூட்டணிக்கு வர வாய்ப்பு: பா.ஜ.க. மாநில இணை அமைப்பாளர் தகவல்

"என்.டி.ஏ கூட்டணிக்கு த.வெ.க. தலைவர் விஜய் வருவாரா மாட்டாரா என்று இப்போது கூற முடியாது. போகப்போக விஜய், என்.டி.ஏ. கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்புள்ளது."

-இவ்வாறு பா.ஜ.க. அனைத்து பிரிவு மாநில இணை அமைப்பாளர் எம். நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

" நயினார் நாகேந்திரன் கூட்டத்திற்கு பொதுமக்களே எழுச்சியுடன் பங்கேற்கிறார்கள். அதனால் எதிர்வரும் 2026 தேர்தலில் தமிழகத்தில் என்.டி.ஏ. கூட்டணிக்கு சிறப்பான வாய்ப்பு உள்ளது. என்.டி.ஏ. கூட்டணிக்கு



தவெக தலைவர் விஜய் வருவாரா மாட்டாரா என்று இப்போது கூற முடியாது. போகப் போக விஜய், என்.டி.ஏ. கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்புள்ளது." என்று அவர் தெரிவித்துள்ளார்.





# அமெரிக்கா மீண்டும் அணு ஆய்வுகளைத் தொடங்கினால் தகுந்த பதிலடி கொடுக்கப்படுமென ரஷ்யா அறிவிப்பு

அமெரிக்கா மீண்டும் அணு ஆய்வுகளைத் தொடங்கினால், ரஷ்யாவும் தகுந்த முறையில் பதிலளிக்கும் என்று கிரெம்ளின் பேச்சாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உட்பட அதிகாரிகள் அணு ஆய்வுகள் குறித்து தொடர்ந்து கருத்து வெளியிட்டு வரும் நிலையில் பெஸ்கோவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அத்தோடு, இது அமெரிக்காவின் அணு ஆய்வுத் தடை ஒப்பந்தத்திலிருந்து விலகும் அறிகுறியாக கருதப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரஷ்ய ஜனாதிபதி புடின் நவம்பர் 05 ஆம் திகதி விடுத்த உத்தரவு, அணு ஆய்வுகளுக்கான தயாரிப்புகளை தொடங்குவதற்கான தல்ல என்றும் பெஸ்கோவ் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் செர்கி ஷோய்கூ மேலும் கூறுகையில்,

“ரஷ்யா பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் நிபுணர்கள், தற்போதைய சவால்கள் மற்றும் எதிர்கால சாத்தியங்களை கருத்தில் கொண்டு பதில்கள் எடுக்கும் முன்மாதிரிகள் செய்யத் தொடங்கியுள்ளனர்.

ரஷ்யா எந்த சூழ்நிலையிலும் புதிய ஆயுதப் போட்டியை ஏற்பட விடமாட்டாது, ஆனால் தேவையான முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டு எந்த மாற்றத்திற்கும் தயார் நிலையில் இருக்கிறது.” என்றார்.

இந்த நிலையில், ஐரோப்பிய நாடுகள் மற்றும் நேட்டோவின் நடவடிக்கைகள் தீவிரமானதாக மாறியுள்ளதைக் கவனித்து ரஷ்யா தனது இராணுவத் திட்டங்களை அதன்படி சீரமைத்துக் கொண்டிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# மூன்று செயற்கைக்கோள்களை ஒரே நேரத்தில் ஏவுகிறது ஈரான்

ஒரே நேரத்தில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மூன்று புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ உள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், அடுத்த மூன்று நாள்களில் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஈரான் குறிப்பிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பயா, ஜாபர் மற்றும் கோவ்சர் ஆகிய மூன்று புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்களே இவ்வாறு செலுத்தப்படவுள்ளன.

இது குறித்து, ஐ.எஸ்.ஏ எனப்படும்



ஈரான் விண்வெளி அமைப்பின் தலைவர் ஹசன் சலாரியே கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

“பல ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகள் விதித்த பல்வேறு தடைகள் இருந்த போதும், விண்வெளி திட்டத்தில் பெரிய முன்னேற்றங்களை ஈரான் கண்டுள்ளது. இதன்படி, உள்நாட்டிலேயே தயாரிக் கப்பட்ட பயா, ஜாபர் மற்றும் கோவ்சர் ஆகிய மூன்று செயற்கைக்கோள்களை ஒரே ராக்கெட் மூலம் ஒரே நேரத்தில் விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளோம்.

இதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும், விவசாயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை தொடர்பான தரவுகளை இந்த மூன்று செயற்கைக் கோள்கள் வழங்கும்” என அவர் தெரிவித்துள்ளார்.

# நீண்ட கால பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவுடன் மேற்கொள்ள இஸ்ரேல் முயற்சி

அமெரிக்கா உடனான நீண்ட கால பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் முயற்சித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவுடன் 20 ஆண்டு கால விரிவாக்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இணைவது தொடர்பான முயற்சியில் இஸ்ரேலிய அரசாங்கம் இறங்கி இருப்பதாக இருநாட்டு அதிகாரிகளை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுடன் தற்போது செயல்பாட்டில் இருக்கும் 10 ஆண்டு கால பாதுகாப்பு ஒப்பந்தம் எதிர்வரும் 2028 ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருக்கும் நிலையில், இஸ்ரேல் முன்மொழிந்துள்ள இந்த ஒப்பந்தம்



பழைய ஒப்பந்தத்தின் மாற்றாக இருக்கும்.

மேலும் இஸ்ரேலிய அதிகாரிகள் இந்த முன்மொழி ஒப்பந்தத்தை அடுத்த ஆண்டின் இறுதிக்குள் உறுதி செய்ய ஆர்வமாக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை பழைய ஒப்பந்தத்தின் கால அளவை இரட்டிப்பாக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.

பழைய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் படி, அமெரிக்கா ஆண்டுக்கு 4 பில்லியன் டொலர் நிதியுதவி அளிக்கும் நிலையில், புதிய ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்காவின் கூடுதல் நிதியுதவியை இஸ்ரேல் எதிர்பார்க்கும் என்று கூறப்படுகிறது.

மேலும் பழைய ஒப்பந்தத்தில், அமெரிக்க நிதியானது இராணுவ உதவிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது.

அதற்கு மாற்றாக தற்போது அந்த நிதியை அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கு பயன்படுத்தலாம் என்று இஸ்ரேல் பரிந்துரைத்துள்ளது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 14/101/2025

## ஒன்டாரியோவில் பாரியளவு போதைப் பொருள்கள் மீட்பு

ஒன்டாரியோ மாகாண பொலிஸ் மற்றும் வின்சர் பொலிஸ் இணைந்து நடத்திய விசாரணையால்,ஒன்டாரியோ மாகாண பொலிஸ் வரலாற்றிலேயே மிகப்பெரிய பென்டனில் கைப்பற்றல்

02



# இலங்கைக்கான கனடாவின் புதிய உயர்ஸ்தானிகர் நியமனம்

இலங்கைக்கான கனடாவின் வதிவிட உயர்ஸ்தானிகராக இசபெல் மாரி கேத்தரின் மார்ட்டின் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்த அறிவிப்பை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்போது, இசபெல் மாரி கேத்தரின் மார்ட்டின் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன், கனடாவின் அரசாங்கத்தால் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பான நிகழ்வானது, கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதிச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.



# கனடாவில் பஸ் ஒன்று கடத்தப்பட்டதால் பதற்றம்

கனடாவில் பஸ் ஒன்று ஒருவரால் கடத்தப்பட்ட சம்பவம் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செவ்வாயன்று இரவு 9.00 மணிய ளவில் ஹாமில்ட்டனில் பஸ் ஒன்றை நிறுத்திய அதன் சாரதி தேநீர் அருந் தச் சென்றுள்ளார்.

திடீரென பஸ் புறப்பட்டுள்ளது. பஸ்ஸில் 10 பயணிகள் இருக்க, யாரோ ஒரு நபர் பஸ்ஸை இயக்கத் துவங் கியுள்ளார்.

தகவலறிந்த பொலிஸார், அந்த நபர் பஸ்ஸை கடத்திச் செல்வதை உணர்ந்து, பயணிகளின் பாதுகாப்பு கருதி அமைதியாக அந்த பஸ்ஸை பின்தொடர்ந்துள்ளனர்.

அந்த நபர் பஸ்ஸை கடத்தி எங்கோ எடுத்துச் செல்லாமல், முறை யாக ஒவ்வொரு பஸ் நிலையத்திலும் பஸ்ஸை நிறுத்தி பயணிகளை ஏற்றிக்கொண்டும், இறக்கிவிட்டுக் கொண்டும் செல்வதைக் கண்ட பொலிஸார் திகைப்படைந்துள்ள னர்.




அத்துடன், அந்த நபருக்கு பஸ் செல்லும் வழி சரியாகத் தெரியாத தால் சில பயணிகளின் உதவியை நாடியுள்ளார். அவர்கள் வழி சொல்ல, இவர் பஸ்ஸை இயக்கியுள்ளார்.

சுமார் நான்கு மைல் தூரம் சென்ற பின் பஸ் ஓரிடத்தில் நிற்க, பொலி ஸார் சென்று அவரைக் கைது செய் துள்ளார்கள்.

அவரது பெயர், புகைப்படம் முத லான விவரங்களை பொலிஸார் வெளி யிடவில்லை. பஸ்ஸை கடத்திய நபருக்கு மன நல பிரச்சினைகள் இருக்கக்கூடும் என அவர்கள் தெரி வித்துள்ளனர்.

# துஷ்பிரயோக குற்றச்சாட்டு; 28 வயது சந்தேகநபர் கைது

கனடாவின் ஒஷாவா நகரில் பல வீடுகளில் புகுந்து பெண்களை பாலியல் ரீதியாகத் தாக்கினார் என கூறப்படும் 28 வயது ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒன்டாரியோ மாநிலத்தின் டர்ஹாம் பொலிஸார் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் நவம்பர் 11 ஆம் திகதி பிற்பகல் 4.20 மணியளவில் சிம்கோ தெரு தெற்கு மற்றும் ராயல் தெரு பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

கனடாவின் ஒஷாவா நகரில் பல வீடுகளில் புகுந்து பெண்களை பாலி யல் ரீதியாகத் தாக்கியதாகக் கூறப் படும் 28 வயது ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒன்டாரியோ மாநிலத்தின் டர்ஹாம் பொலிஸார் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் நவம்பர் 11 ஆம் திகதி பிற்பகல் 4.20 மணியளவில் சிம்கோ



தெரு தெற்கு மற்றும் ராயல் தெரு பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

முதலில், குற்றவாளி ஒரு வீட்டிற் குள் நுழைந்து மோசமாக நடந்து கொள்ள முயன்றார் ஆனால், அங்கு இருந்த நாயால் பயந்த அவர் விரை வில் தப்பி ஓடிவிட்டார்.

அதைத்தொடர்ந்து, அதே தெருவில் உள்ள மற்றொரு வீட்டிற்குள் நுழைந்த அவர், அங்கு இருந்த வீட்டின் பெண் உரிமையாளரைத் தாக்கி பாலியல் ரீதியாகத் தாக்குதல் நடத்தினார் என பொலிஸ் கூறியுள்ளது.

அதன்பிறகு, குற்றவாளி சிம்கோ மற்றும் ஃபேர்பேங்க்ஸ் தெருக்கள் சந்திக்கும் பகுதியில் உள்ள மூன்றா வது வீட்டிற்குள் புகுந்து, அங்கு படுக் கையிலிருந்த மூதாட்டியை பாலியல் ரீதியாகத் தாக்கி, ஜன்னல் வழியாக தப்பியோடியுள்ளார்.

தொடர்ந்து நடவடிக்கை எடுத்த காவல்துறையினர் குற்றச்சாட்டுக்குட் பட்ட நபரை சில நிமிடங்களுக்குள் கைது செய்தனர்.

இக்குற்றச்சாட்டுகள் இன்னும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை எனவும், கூடுதல் தகவல் அல்லது கண்காணிப்பு காட்சி உள்ளவர்கள் பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஒன்டாரியோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

46 கிலோ கிராம் எடையுடைய பென்டனில், சுமார் 6.5 மில்லியன் கனேடிய டொலர் மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை வின்சர் நகருக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வளவு பாரிய அளவிலான



பென்டனிலை சாலைகளில் இருந்து அகற்றுவதால் பல உயிர்கள் காப் பாற்றப்படுகின்றன," என வின்சர் காவல் துறை துணைத் தளபதி ஜேசன் கிரெளலி தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு பேருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

25 வயதான வின்சர் நகர் நிக் கோலஸ் காங் மீது 27 குற்றச்சாட்டு களும், வான்கூவர் நகரைச் சேர்ந்த 28 வயது ஜோஷுவா அக்யூரி மீது 29 குற்றச்சாட்டுகளும் பதிவு செய் யப்பட்டுள்ளன.